# ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்

1. அருள்மயமாக நிறைந்த அமுத சொரூபக் கடலே! விரிந்து பரந்த ஞான ஒளிக்கிரணங்களால் அகில வஸ்துக்களையும், தன்னுள் விழுங்குகின்ற அருணாசலமென்னும் மலைவடிவ பரம்பொருளே! எனது இதயத் தாமரை நன்கு விரிந்து மலரும் வண்ணம், ஞான சூரியனாக எழுந்து அருள்வாயாக.

2. செம்பொன் சுடராக ஒளிரும் அருணாசலனே! சித்திரமாகத் தோன்றும் மாயா காரியமான நாம-ரூபப் பிரபஞ்சம் எல்லாம் உன்னிடத்தில் தோன்றி, விளங்கி, உன்னிடத்திலேயே மறைந்து விடுகின்றன. நீயோ என்றென்றும் "நான்-நான்" என்று இதயத்தில் உள்ளுணர்வாக நடம் புரிவதால் உன் பெயர்தான் இதயமென்று உன்னை உணர்ந்த தபோதனர்கள் சொல்லுவார்கள்.

3. உள்முக நோக்கத்தோடு கூடிய ஏகாக்கிரமான, குற்றமற்ற மனத்தினால், ''நான்'' என்ற தற்போதம் எங்கிருந்து உண்டாகிறதென்று நன்கு ஆராய்ந்தால், அந்த "நான்" என்னும் தன்மை, கடலில் கலந்துவிடும் நதியைப் போல தன்னுருவை உன்னில் இழந்து, அருணாசலா! உன்னிடத்திலேயே ஒடுங்கி விடும்.

4. சுயம்பிரகாச சொரூபமாய் விளங்கும் அருணாசலா! வெளிமுக விஷயங்களை நீக்கிவிட்டு, பிராணாயாமாதி யோகாப்பியாசத்தினால், நிச்சலமாக நிற்கக்கூடிய சாத்வீக மனத்தினால் இதயத்தில் பொருத்தி, இடைவிடாமல் உன்னை தியானித்து யோகியானவன் உன்னை சித்சொரூபமாகிய ஜோதி வடிவில் தரிசனம் பெற்று மிக உயர்ந்த 'ஜீவன் முக்தி' நிலையினை அடைகிறான்.

5. அருள்மிகு அருணாசலேச்வரா! உன்னையே சரணாகதியடைந்து, அனைத்தையும் உனக்கே ஒப்படைத்து தூய்மை நிறைந்த உள்ளத்தினால், சதாகாலமும் காணக்கூடிய அனைத்தையும் உன் சொரூபமாகவே கருதி, உன்னிடம் அனன்ய பக்தி செலுத்தும் உத்தம பக்தன், சுக சொரூபமான உன்னில் இரண்டறக் கலந்து பேரின்ப நிலையை எய்துகிறான்.

ஸ்ரீ

# அருணாசல பஞ்சரத்னம்

(வெண்பா)

*1.* அருணிறை வான வமுதக் கடலே
விரிகதிரால் யாவும் விழுங்கு — மருண
கிரிபரமான் மாவே கிளருளப்பூ நன்றாய்
விரிபரிதி யாக விளங்கு.

*2.* சித்திரமா மிஃதெல்லாஞ் செம்மலையே நின்பாலே
யுத்திதமாய் நின்றே யொடுங்கிடுமா — னித்தியமு
நானென் றிதய நடித்திடுவை யாலுன்பேர்
தானிதய மென்றிடுவர் தாம்.

*3.* அகமுகமா ரந்த வமலமதி தன்னு
லகமிதுதா னெங்கெழுமென் றாய்ந்தே — யகவுருவை
நன்கறிந்து முந்நீர் நதிபோலு மோயுமே
யுன்கணரு ணாசலனே யோர்.

*4.* வெளிவிடயம் விட்டு விளங்குமரு ணேசா
வளியடக்க நிற்கு மனத்தா — லுளமதனி
லுன்னைத் தியானித்து யோகி யொளிகாணு
முன்னி லுயர்வுறுமீ துன்.

*5.* உன்னிடத்தி லொப்புவித்த வுள்ளத்தா லெப்பொழுது
முன்னைக்கண் டெல்லாமு முன்னுருவா — யன்னியமி
லன்புசெயு மன்னே னருணாசை லாவெல்கு
மின்புருவா முன்னிலாழ்ந் தே.

6. அருணாசல க்ஷேத்திர பகவான் ரமணன், வடமொழியில் ஆர்யாகீத விருத்தத்தில் இயற்றிய இந்த அருணாசல பஞ்சரத்னம் உபநிஷத்துக்களின் கருத்தேயாகும். இதனை தண்மை மிகுந்த இனிய செந்தமிழ் வெண்பாவாக உலகத்தோருக்கு மகிழ்ச்சியுடன் மீண்டும் அருளினான்.

6. அருண கிரிரமண ணுரியத்திற் கண்ட
வருமறையந் தக்கருத்தே யாகு — மருண
சலபஞ் சகமணியைத் தண்டமிழ்வெண் பாவா
லுலகுக் களித்தா னுவந்து.

விஷ்ணு முதலான அனைவரது இதயத்தாமரை என்னும் குகையில் பிரகாசிக்கும் ஆத்ம சொரூபமாய் ரமித்துக் கொண்டிருக்கும் பரமாத்மாவே அருணாசல ரமணனாகும். அவனை அடைய வேண்டுமானால் பக்தியினால் நெஞ்சுருகி, இதய குகையை அடைந்து, மெய்யறிவாகிய ஞானக் கண்ணைத் திறந்து நோக்கினால் அவ்வருணாசல ரமணனின் உண்மை சொரூபத்தை உள்ளபடி அறிவாய். அந்த சொரூபமானது சிதாகாசப் பரவெளி ஆகும்.

## தனி

### (விருத்தம்)

அரியாதியி தரசீவர தகவாரிச குகையில்
லறிவாய்ரமி பரமாத்தும னருணாசல ரமணன்
பரிவாலுள முருகாநல பரனூர்ந்திடு குகையார்ந்
தறிவாம்விழி திறவாநிச மறிவாயது வெளியாம்.

---

வானோங்கு கருணை மிகுந்த அருணாசல வள்ளலின் திருநாமம் வாழ்க! அத்திருநாமம் வாய்க்கப் பெற்ற அருணாசல ஸ்துதி பஞ்சகம் வாழ்க! பகவான் ரமணனின் திருவாயிலிருந்து மலர்ந்து உதிர்ந்த திருமொழிகள் வாழ்க! மாண்புமிக்க ரமணாசாரியனுடைய திருவடிகளையே பற்றி உறுதியாக நிற்கும் அன்பர்களும் வாழ்க!

## வாழ்த்து

வாழ்க வானரு ணாசல வண்பெயர்
வாழ்க வப்பெயர் வாய்துதி பஞ்சகம்
வாழ்க வாய்மலர் மாரம ணன்பதம்
வாழ்க வப்பத மன்னுநல் லன்பரே.

– முருகனார்

<u>ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்: நூல் வரலாறு</u>

*ஒருசமயம் காவ்ய கண்ட கணபதி முனிவர் தமிழ் வெண்பா இலக்கணத்தை அனுசரித்து சமஸ்கிருதத்தில் கவிதை எழுத முயன்றார். அது முடியாமல் போகவே, ஸ்ரீபகவானிடம் சென்று சமஸ்கிருதத்தில் 'ஆர்யாகீதி' யின் இலக்கண முறைப்படி சில சுலோகங்கள் இயற்றுமாறு வேண்டினார். அதன்படியே ஸ்ரீ பகவான் 'கருணாபூர்ணா சுதாப்தே' என்ற ஒரு சுலோகத்தை ஆர்யா விருத்தத்தில் எழுதி வைத்துக் கொண்டார். இதற்குச் சில ஆண்டுகளுக்குப்பிறகு 1917-ம் ஆண்டு காவ்ய கண்ட கணபதி முனிவர் பகவானிடம் சென்று ஆர்யா கீதவிருத்தத்தில் தான் எழுதும் ரமண கீதைக்கு மங்கள ஸ்லோகம் எழுதி தரும்படி கேட்டார். பகவானும் அப்படியே எழுதி அருளினார். அதுவே அருணாசல பஞ்சரத்னத்தின் முதல்பாடல் ஆகும். மேலும் அவர், ஆத்ம லக்ஷணம், விசாரம், யோகம், பக்தி பற்றிய நான்கு சுலோகங்களையும் எழுதி தரும்படி கேட்க பகவான் அவ்வாறே எழுதி அருளினார். அதுவே 2 முதல் 5 வரை உள்ள பாடல்களாயின. பின்னர் அதை பகவான் தமிழிலும் மொழிபெயர்த்து அருளினார்.*